செ.வெ.எண்: 7

24/11/2012

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பத்திரிகை செய்தி – 24.11.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களை, ஐஸ்லேண்ட் பாராளுமன்றக் குழுத் தலைவர் மேதகு அஸ்தா ஆர். ஜோகான்ஸ்டோட்டர் அவர்கள் தலைமையில் நான்கு பேர் கொண்ட குழு இன்று (24.11.2012) நண்பகல் 12.00 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களது அறையில் சந்தித்து கலந்துரையாடியது. பின்னர் அவர்கள், சட்டமன்றப் பேரவையின் வைரவிழாவினையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23.11.2012 அன்று திறந்து வைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியை பார்வையிட்டனர். அவ்வமயம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. அ.மு.பி. ஜமாலுதீன் அவர்களும் உடனிருந்தார்.

செயலாளர்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்,
சென்னை–600 009

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9